# ஆகஸ்ட்– 07– செவ்வாய்

**புனித கயித்தார்**

**ஏனெனில், ஆண்டவர் சீயோனைக் கட்டியெழுப்புவார்: திபா. 102:16**

## முதல் வாசகம் ஏரேமியா30 : 1– 2, 12 – 15,18- 22

ஆண்டவரின் வாக்கு எரேமியாவுக்கு மீண்டும் அருளப்பட்டது. ”இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களை எல்லாம் ஏட்டுச் சுருளில் எழுதிவை. ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்: உனது காயத்தைக் குணப்படுத்த முடியாது. உனது புண் புரையோடிப்போனது .உனக்காக வாதிட எவனும் இல்லை. உனது காயத்தை ஆற்ற மருந்தே இல்லை. உன்னைக் குணப்படுத்தவே முடியாது.உன் காதலர் அனைவரும் உன்னை மறந்துவிட்டனர் உன்னை அவர்கள் தேடுவதே இல்லை. மாற்றான் தாக்குவதுபோல நான் உன்னைத் தாக்கினேன். கொடியோன் தண்டிப்பதுபோல நான் உன்னைத் தண்டித்தேன். ஏனெனில் உனது குற்றம் பெரிது. உன் பாவங்களோ எண்ணற்றவை.நீ நொறுக்கப்பட்டதை எண்ணி ஏன் அழுகின்றாய்? உனது வேதனையைத் தணிக்கமுடியாது. ஏனெனில் உனது குற்றமோ பெரிது. உன் பாவங்களோ எண்ணற்றவை. எனவே இவற்றை எல்லாம் நான் உனக்குச்செய்தேன்.ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்: அடிமைத்தனத்தினின்று நான் யாக்கோபின் கூடாரங்களை திரும்பக்கொணர்வேன். அவனுடைய உறைவிடங்கள்மீது நான் இரக்கம் காட்டுவேன் அவற்றின் இடிபாடுகள்மேலேயே நகர் மீண்டும் கட்டி எழுப்பப்படும். அரண்மனையும் அதற்குரிய இடத்திலேயே அமைக்கப்படும். அவர்களிடமிருந்து நன்றிப்பாக்கள் எழும்பிவரும் மகிழ்ச்சியுறுவோரின் ஆரவாரம் கேட்கும். அவர்களை நான் பல்கிப் பெருகச்செய்வேன் அவர்கள் எண்ணிக்கையில் குறையமாட்டார்கள். நான் அவர்களைப் பெருமைப்படுத்துவேன் இனி அவர்கள் சிறுமையுறமாட்டார்கள்.அவர்களுடைய பிள்ளைகள் முன்புபோல் இருப்பர் அவர்களது கூட்டமைப்பு என்திருமுன் நிலைநாட்டப்படும் அவர்களை ஒடுக்குவோர் அனைவரையும் தண்டிப்பேன்.அவர்களின் தலைவன் அவர்களுள் ஒருவனாகவே இருப்பான் அவர்களை ஆள்பவன் அவர்கள் நடுவினின்றே தோன்றுவான் அவன் என்னை நெருங்கிவரச்செய்வேன் அவனும் என்னை அணுகிவருவான் ஏனெனில், என்னை அணுகிவர வேறுயாருக்குத் துணிவு உண்டு?, என்கிறார் ஆண்டவர்.நீங்கள் என்மக்களாய் இருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் சீயோனைக் கட்டியெழுப்பி மாட்சியுடன் திகழ்ந்திடுவார்.

## நற்செய்தி : மத்தேயு 14 : 22- 36

அக்காலத்தில் இயேசு கூட்டத்தினரை அவ்விடத்திலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தார். அப்பொழுது சீடரையும் உடனே படகேறித் தமக்குமுன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப் படுத்தினார். மக்களை அனுப்பிவிட்டு அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒருமலையின்மேல் ஏறினார். பொழுது சாய்ந்தபிறகும் அங்கே அவர் தனியே இருந்தார்.அதற்குள் படகு கரையிலிருந்து நெடுந்தொலைசென்றுவிட்டது. மேலும் எதிர்க்காற்று அடித்துக் கொண்டிருந்ததால் அலைகளால் படகு அலைக்கழிக்கப்பட்டது. இரவின் நான்காம் காவல்வேளையில் இயேசு அவர்களை நோக்கிக் கடல்மீது நடந்துவந்தார்.அவர் கடல்மீது நடப்பதைக்கண்ட சீடர் கலங்கி ”ஐயோ பேய்” என அச்சத்தினால் அலறினர்.உடனே இயேசு அவர்களிடம் பேசினார். ”துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள்” என்றார். பேதுரு அவருக்கு மறுமொழியாக ”ஆண்டவரே நீர்தாம் என்றால் நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும்” என்றார். அவர் ”வா” என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்துசென்றார்.அப்பொழுது பெருங்காற்று வீசியதைக்கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது ”ஆண்டவரே என்னைக்காப்பாற்றும்” என்றுகத்தினார்.இயேசு உடனே தம் கையை நீட்டி அவரைப்பிடித்து ”நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம்கொண்டாய்?” என்றார்.அவர்கள் படகில் ஏறியதும் காற்று அடங்கியது.படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து ”உண்மையாகவே நீர் இறைமகன்” என்றனர்.அவர்கள் மறு கரைக்குச்சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்தார்கள். இயேசுவை யாரென்று அறிந்துணர்ந்த அவ்விடத்து மக்கள் சுற்றுப் புறமெங்கும் ஆள் அனுப்பி எல்லா நோயாளர்களையும் அவரிடம் கொண்டு வந்தனர்.அவரது மேலுடையின் ஓரத்தையாவது அவர்கள் தொட அனுமதிக்குமாறு அவரை வேண்டினர் தொட்டவர் யாவரும் நலமடைந்தனர்.

**தியானம் :** இன்றைய நற்செய்தி இரு பகுதிகளைக்கொண்டது

1 தண்டு வலிக்க கஸ்டப்பட்டுக்கொண்டிருந்த தன்சீடர்களை நோக்கி இயேசு வருதல்.
2

2 இறை மகனாகிய இயேசுவை நோக்கி பேதுரு வருவது. இந்த இரண்டு நிகழ்வுகளும் இரு ஆழமான உண்மைகளை நமக்கு முன் நிறுத்துகின்றன.

மனிதனை நோக்கிக் கடவுள்: உலகமாகிய கடலில் மனிதன் தன் வாழ்க்கையைப் படகை செலுத்துவது எளிதானதல்ல. அதில் ஏராளமான கஸ்டங்களும், கண்ணீர்களும் உண்டு. தண்டு வலிக்க கஸ்டப்பட்ட சீடர்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளால் சின்னாப்பின்னப்படுத்தும் மனித குலத்திற்கு உதவி செய்யவும் ஊன்று கோலாக இருக்கவும் இறைவனே மனிதனைத்தேடி வருகின்றார். ஆனால் துரதிஷ்டவசமாக இந்த இறைவனின் இந்தத் தேடலை மனிதர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்ற உண்மையே “ஐயோ பேய்” என்ற சீடர்களின் கதறல் நமக்கு எடுத்துரைக்கிறது. பிரச்சனைப்புயல்களும், துன்பக்காற்றும் வீசினாலும், இறைவனின் உடனிருப்பை நாம் உணர்ந்தோம் என்றால் நாம் கண்ணீர் விடப்போவதில்லை, கலங்கப்போவதில்லை. கடவுளை நோக்கி மனிதன். கடவுளின் அளவற்ற ஆற்றலாலும், அவரது வரையறையற்ற வல்லமையாலும் ஈர்க்கப்படும் மனிதன் கடவுளை நோக்கி தன்பயணத்தை அமைத்துக்கொள்கின்றான் என்பதை பேதுருவின் செயல் நமக்கு எடுத்துரைக்கிறது. .ஆனால் இந்தப்பயணத்தில் கடவுள் மீது ஒருவிதமான ஈர்ப்பு கொண்டிருப்பது மட்டும் போதுமானதல்ல. ஆழமான விசுவாசம் தேவை. இந்த விசுவாசம் மட்டுமே நாம் இருக்கின்ற நிலையிலிருந்து இறைவனிடம் நம்மை எடுத்துச் செல்லும் கருவியாக இருக்கிறது. விசுவாசம் என்பது என்ன என்பதற்கான விளக்கத்தையும் இன்றைய நற்செய்தி நமக்குத் தருகின்றது. முழுக்க முழுக்க நம் கண்களை இறைவனில் பதிய வைப்பதே விசுவாசம் என்பது இயேசுவின் மீது கண்களை பதிய வைத்த பேதுரு பின்பு பெருங்காற்று வீசியதைக்கண்டு அதில் தன் கண்களைப் பதிய வைத்ததால் மூழ்க நேரிட்டது. இதற்கு மாறாக எவ்வளவு இடர்பாடுகளும் தடைக்கற்களும் வந்தாலும் , நம் எண்ணத்தை இறைவனில் முழுக்க முழுக்க பதிய வைக்கும்போது எதுவும் நமக்கு தீங்கு செய்து விட முடியாது ,என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.